
# கொரோனா காலத்தில் சமையல்

கோவிட்-19: இந்திய விஞ்ஞானிகளின் பதில்
ஒரு தன்னார்வக் குழு


IndiSciCovid

https://indscicov.in/




ISRC
Indian Scientists' Response to COVID-19

மாலையாகி விட்டது, பசியும் வரப் பார்த்தது. சாதாரண பசியில்லை, கோழிக்கறி வேண்டும் என்ற குறிப்பான பசி! அப்பாவை நச்சரிக்க துவங்கினேன், “உங்களுடைய காரசாரமான ஸ்பெஷல் கோழிக்கறி செய்யுங்கள் அப்பா” என்று. அம்மாவும் சேர்ந்து கொண்டார் -- எனக்கும் இன்று சமையல் செய்யப் பிடிக்கவில்லை, நீங்கள்தான் செய்யுங்களேன் என்றார்.



சரியென்ற அப்பா உடனே கைகளை சோப்பு போட்டு நன்றாக கழுவிக் கொண்டார். நான் “20 19 18 ...” என்று 0-வை நோக்கி பயணிக்க, அம்மாவும் சேர்ந்து கொண்டார். வழக்கமாக வானொலி அருகே தரையில் அமர்ந்துதான் காய்கறியெல்லாம் நறுக்குவார் அப்பா. அன்று காலை ரமேஷ் மாமா வந்து போனபின், அப்பா அவர் அமர்ந்த இடத்தை சோப்பு போட்டு துடைத்தது நினைவில் வந்தது. இப்போது அங்கு கோழியை வெட்டி மிளகாய் நறுக்கினார். “இன்னும் இன்னும்” என்று அரித்தேன் நான்.



“எனக்கு வெங்காயம் நறுக்கி தாயேன் “

“ஐயோ வேண்டாம், என் கண் எரியும்”

மூன்று வெங்காயங்கள் உரித்து நறுக்கப்பட்டன. அதற்குள் பக்கத்து வீட்டு சரளா மாமி அம்மாவிடம் பேச வந்துவிட்டார். வெளியில் நின்றுகொண்டே, “என் தங்கை என்ன செய்தாள் தெரியுமா? வெங்காயம் தக்காளி எல்லாம் சோப்பு போட்டு கழுவினாள் , அத்தனை எச்சரிக்கை! குடும்பமே சோப்புப் போட்டு சாப்பாடு சாப்பிட்டது!” என்றார். எனக்கு ஒரே சிரிப்பு.

அம்மா விளக்கினார். அதெல்லாம் தேவையில்லை, உணவில் வைரஸ் வளராது, சமைக்கும் போது அந்த வெப்பத்தில் அழிந்துவிடும். அது பாக்டீரியா போல இல்லை என்று குறிப்பிட்டார். “ஆனால் காய்கறி சந்தையில் இருந்த போது எல்லாரும் தொட்டிருப்பார்களே! அப்போது?” என்று கேட்டேன் நான்.

“சரிதான், அதனால்தான் உன் அண்ணா வாங்கி வந்தவுடனே அவற்றை நன்றாக கழுவினேன்”

“அதன்பின் 20 .. 19 … “ எல்லோரும் சிரித்தோம்.



சரளா மாமி அப்பா கோழிக்கறி செய்வதை கவனித்தார். “இது பிரச்சினையில்லையா? இந்த வைரஸ் விலங்குகளிலிருந்து வருகிறது என்று வாட்சப்பில் வந்ததே” என்றார் . அப்பாவுக்கு லெக்சர் அடிக்க வாய்ப்பு: “நிச்சயம் பிரச்சினையில்லை, இந்த வைரஸ் மனிதருக்கு மனிதர்தான் பரவிக் கொண்டிருக்கிறது. கறி எல்லாம் தாராளமாய் சாப்பிடலாம், டாக்டர்கள் கூட இதையே சொல்லுகின்றனர்” என்றார். “எனக்கு அதிருஷ்டம்” என்று நினைத்தேன் நான். தன் பெண் கூப்பிடவே சரளா மாமி சென்றுவிட்டார்.

கடைக்குப் போன சேகர் அண்ணா வந்துவிட்டான். அரிசி, பருப்பு வாங்க அம்மா அனுப்பியிருந்தார். அப்படியே எனக்கு க்ரீம் பிஸ்கட்! ஒரு நிமிடம் குழப்பமாய் அவன் வெளியே நிற்கவும், சிரித்தவாறு உள்ளே சென்ற அம்மா அரிசி பருப்பு இரண்டுக்குமான டப்பாக்களை எடுத்து வந்தார். அண்ணாவை அவன்கொண்டு வந்த பிளாஸ்டிக் பைகளை அங்கேயே வெட்டி நேராக (தொடாமல்) டப்பாவுக்குள் போட செய்தார். “கீழே சிந்தி விடாதே” என்றுவேறு எச்சரிக்கை! பாவம் அண்ணா. கவனமாய்த்தான் செய்தான். என் பிஸ்கட்டுகளும் அதேபோல் நேராக அவற்றுக்கான டப்பாவில் சென்றடைந்தன. “ஏய்” என்று வெற்றிக்கூவல் விடுத்தான் அண்ணா. அவன் கொஞ்சம் கிறுக்குதான். அன்று காலை சரளா மாமி கொண்டுவந்த உருளை கிழங்கு பொரியலும் அப்படிதான் நேரே விழுமாறு தரப்பட்டது. எல்லாம் எனக்கு நாடகம்தான்.



“இந்த பிளாஸ்டிக் காகிதம் எல்லாம் என்ன செய்ய?” என்று கேட்டான் அண்ணா. அதற்காகவே வாசலில் வைத்திருந்த தொட்டியை காண்பித்தார் அம்மா. காலணிகளை கழட்டிய அண்ணா நேரே உள்ளே சென்று கை கால் கழுவிக் கொண்டான். அவன் கைகளை கழுவும்போது “20 … 19 …” என்று என் பாட்டு.


அப்பா அதற்குள் சமையலறையில் வேலையாக இருந்தார். மதியம் சமையலறை முழுதும் நன்கு கழுவப்பட்டு அடுப்புகூட பளீர் என்று பளிச்சிட்டது. கருவேப்பிலை பெருங்காயம் நறுமணம் வீடு முழுதும். கோழி எண்ணையில் மசாலா மணத்துடன் பொரிந்து கொண்டிருந்தது.

அம்மா நடுவறையில் உட்கார்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்தார். சமையல் கையுடன் கேட்டார் அப்பா: “அடுத்த பிளாக்கில் ஜேக்கப்புக்கு நேற்றிலிருந்து காய்ச்சலும் சளி இருமலும் என்று கேள்விப்பட்டாயா?”

“அவங்க எல்லாருக்கும் ரொம்ப பயமாயிருக்கும் நாம போய் பார்த்துவிட்டு வரலாமா?” என்று கேட்டான் சேகர். “இல்லை இல்லை இதற்குள் ஜேக்கப் தனிமையில் இருப்பான், குடும்பமும் தனித்து இருக்கும்” என்றார் அம்மா.

“பாவம், பின் ஜேக்கப்புக்கு சாப்பாடு எப்படி? கோழிக்கறி எல்லாம் கிடைக்காது” என் கவலை இது.

“அதெல்லாம் பிரச்சினையில்லை, அவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தனியாக இருக்க வேண்டும், மற்றவர்கள் சாப்பாடு எடுத்து தர வேண்டும், பின் தட்டெல்லாம் நன்றாக கழுவ வேண்டும்.” என்று விளக்கினார். ஜேக்கப்புக்கு சீக்கிரம் உடம்பு சரியாக வேண்டும், என்னுடன் பட்டம் விட வேண்டுமே!



“சாப்பாடு ரெடி” என்று குரல் கொடுத்தார் அப்பா. எல்லாரும் கைகளை நன்றாக கழுவி தங்கள் தட்டுக்களை எடுத்து சென்றோம். ஒவ்வொருவருக்கும் சோறும் மணக்கும் கறியும் கிடைத்தது.

“அப்பா நீங்கள் சாப்பிடவில்லையா?” என்று நான் கேட்க, “ஒரு நிமிடம் இரு” என்ற அப்பா தன மூக்கை நன்கு சொரிந்து கொண்டார். “ஆகா, இதற்காக அரை மணி நேரமாய் காத்து கொண்டிருக்கிறேன், சமையல் செய்யும்போது முகத்தை தொடக் கூடாது என்று. இப்போது விடுதலை!”

கைகளை கழுவ சென்றார் அப்பா. நாங்கள் ஒருவருக்கொருவர் இடைவெளி விட்டு சாப்பிட உட்கார்ந்தோம். என்ன மணம் என்ன சுவை ! உலகத்திலேயே சிறந்த கோழிக்கறி என் அப்பா செய்யும் கோழிக்கறிதான்!

இக்கதைகள் வழக்கமான காட்சிகளை சித்திரிக்கின்றன , இங்குள்ள தகவல்களை சூழலில் பொருந்துகின்றன. இவ்வாறு செய்யும் போது எளிமைப்படுதலை தவிர்க்க இயலாது. எங்கள் இணையத்தளத்திலுள்ள பிற அறிவியல் தகவல்களோடு சேர்த்து கருதவும்.

